பக்கங்கள் | பத்து

Registered as a News Paper

03 MAY 1999

# உதயன்

விலை ரூபா 6-00

ஆடி 14 வள்ளுவர் ஆண்டு2030 சித்திரை 20 திங்கட்கிழமை (03-05-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 135

# செஞ்சிலுவை வழித் துணையுடன் விரைவில் பயணிகள் கப்பல் சேவை

## பாதுகாப்பு அமைச்சு முடிவு

கொழும்பு, மே 3

**திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை நடத்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித் துணையைப் பெறுவதென பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.**

பாதுகாப்பு அமைச்சில் கடந்த வாரம் நடந்த உயர் மட்ட மாநாடு ஒன்றில் இது தொடர்பான முடிவு எடுக்கப் பட்டது.

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் நிரந்தர கப்பல் சேவையை நடத்துவது தொடர்பாக ஆராய இந்த உயர்மட்ட மாநாடு கூட்டப் பட்டது.

கடற்கரையில் இருந்து 45 கடல் மைல்களுக்கு அப்பால் பயணிகள் கப்பல்கள் செல்லவேண்டும் என்று முன்னர் கடற்படை அறிவித்திருந்தது.

இந்த நிபந்தனையின் கீழ் பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதில் உள்ள சிக்கல்கள் குறித்து மாநாட்டில் எடுத்துக் கூறப்பட்டது.

இதையடுத்து இந்தக் கப்பல் சேவையை நடத்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையை நாடுவதென முடிவு செய்யப் பட்டது.

ஹொலந்து நாட்டில் இருந்து 50 லட்சம் டொலர் செலவில் புதியகப்பல் ஒன்றை கொள்வனவு செய்யலாம் என்று பாதுகாப்பு அமைச்சு அமைச்சரவைக்குச் சிபாரிசு செய்துள்ளது.

குறைந்த விலையில் பழைய கப்பலைக் கொள்வனவு செய்வதிலும் பார்க்கப் புதிய கப்பலைக் கொள்வனவு செய்வது நல்லது என்று பாது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரெஞ்சு இராணுவ ஆலோசகர் மடுவில்

### நிலைமையை கேட்டறிந்தார்

வவுனியா, மே 3

படையினரால் விடுவிக்கப்பட்ட மடுப்பகுதிக்கு பிரெஞ்சு இராணுவ ஆலோசகர் சலோமின் என்பவர் நேற்று விஜயம் செய்தார்.

வவுனியாவில் உள்ள உயர் இராணுவ அதிகாரிகள் இவரை மடுவுக்கு அழைத்துச் சென்றனர்.

மடுத்தேவாலயப்பங்குத் தந்தை தேவசகாயம் அடிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

மடுவில் உள்ள நிலைமைகளை அவருக்கு விளக்கி அங்கிருந்து படைகள் வாபஸ் பெறப்பட வேண்டும் எனத் தாம் அவரிடம் கூறியதாகவும்—

படையினர் வாபஸ் பெறப்பட வேண்டிய அவசியம் உள்ளதால் உயர் அதிகாரிகளுடன் பேசுவதாக அவர் உறுதி அளித்தார் என்றும்— தேவசகாயம் அடிகள் தெரிவித்தார்.

(இ-3-164)

## வவுனியா நகர்ப் பகுதியில் 2 இடங்களில் மோதல்கள்

வவுனியா, மே 3

வவுனியா நகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு நேரம் இரு இடங்களில் தாக்குதல்கள் இடம்பெற்றன.

குருமன்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ நிலை மீது கிரனேட் வீசப்பட்டது. அதைத் தொடர்ந்து படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதன்பின்னர் காமினி மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள பொலீஸ் நிலை மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பொலீஸாரும் பதில்தாக்குதல் மேற்கொண்டனர்.

இதன் பின்னர் அந்தப் பகுதியில் தேடுதல் இடம்பெற்றதாயினும் எவரும் கைதுசெய்யப்படவில்லை. (இ-3-164)

## போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நகரில் விசேட வீதி ஒழுங்கு அமுலாகும்

யாழ்ப்பாணம், மே 3

யாழ். நகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசல்களைக் கட்டுப்படுத்துவதற்காக விசேட நடைமுறைகள் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளன.

யாழ் மாவட்ட சிவில் இணைப்பதிகாரி பிரிகேடியர் ரி. ஜி. திலகரத்தினா தலைமையில் நடந்த கூட்டம் ஒன்றில் இது தொடர்பானமுடிவுகள் எடுக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வட பிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் மற்றும் 512 படையணி அதிகாரிகள், பொலீஸ் அதிகாரிகள், யாழ். வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், தனியார் சிற்றூர்திச் சங்கங்களின் பிரதிநிதிகள், மாநகரசபை பிரதிநிதிகள் உட்படப் பலர்கலந்து கொண்டனர்.

அங்கு எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு;-

★ நகருக்குச் செல்வதற்கு கஸ்தூரியார் வீதி, காங்கேசன்துறைவீதி ஆகியன ஒரு வழிப்பாதையாக இருக்கும்.

★ நகரின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கும் ஸ்ரான்லி வீதியையும், மின்சார நிலைய வீதியையும் இணைக்கும் பாதை, மின்சார நிலைய வீதியையும் காங்கேசன்துறை வீதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஆயுதங்கள்? முல்லைக் கடலில் மோதல்

கொழும்பு, மே 3

முல்லைத்தீவு கரையில் இருந்து நூறு கடல்மைல் தூரத்தில் தரித்து நின்றதாக நம்பப்படும் கப்பல் ஒன்றில் இருந்து ஆயுதங்களை இறக்கி வந்ததாகக் கூறப்படும் விடுதலைப்புலிகளின் படகுகள் அணி மீது கடற்படை தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிமுதல் இரவு 9.00 மணி வரையும் அந்தப்பகுதியில் இரு தரப்புக்கும் இடையில் கடும் சண்டை இடம் பெற்றதாகவும்—

இந்தச் சண்டையில் விடுதலைப்புலிகளின் ஒரு படகு மூழ்கடிக்கப்பட்டதாகவும்—

ஐந்து படகுகள் சேதமாக்கப்பட்டதாகவும் — கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்கரையில் இருந்து நூறு கடல்மைல் தூரத்தில் சர்வதேச கடல் எல்லையில் ஆயுதக் கப்பல் ஒன்று நின்றதாகத் தகவல் வெளியான போதும்—அப்படி ஒரு கப்பல் அங்கு காணப்படவில்லை என்றும்—கடற்படை அறிவித்துள்ளது. (இ-3)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி!

தென்மராட்சி, மே 3

சாவகச்சேரி தபால்கந்தோர் வீதியில் — பாதுகாப்பு அதிகாரிகள் தங்கியுள்ள முகாம் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த இனந்தெரியாத நபர் ஒருவர் படையினரின் சூட்டுக்கு உள்ளாகி மரணமான சம்பவம் நேற்று அதிகாலை 3 மணிக்கு இடம் பெற்றது.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## நுவரெலியாப் பகுதியில் இனவாதச் சுவரொட்டிகள்

### பொலீஸார் அகற்றினர்

கொழும்பு, மே 3

நுவரெலியாவில் இனவாதத்தைத் தூண்டும் வகையிலான சுவரொட்டிகள், பதாகைகள் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

நுவரெலியா தபால் நிலையத்துக்கு அருகில் காணப்பட்ட அவற்றைப் பொலீஸார் அகற்றினர்.

அதே நேரம் — அரசின் சமாதான முயற்சிகளைக் கண்டித்து நுவரெலியாவில் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் செயல்களை தமிழ் கட்சிப் பிரமுகர்கள் கண்டித்துள்ளனர். (இ-3)

## மாணவன் விசாரணையில்

யாழ்ப்பாணம், மே 3

யாழ். கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயசிரேஷ்ட வகுப்பு மாணவன் த. சிவரூபன் என்பவர் படையினரால் விசாரிக்கப்பட்டு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

நல்லூர் கோயில் வீதியில் முடமாவடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கடந்த வியாழக்கிழமை பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டது தெரிந்ததே.

அந்த வீட்டில் தங்கியிருந்து கல்வி பயின்று கொண்டிருந்த நீர்வேலி வடக்கைச் சேர்ந்த த. சிவரூபன் (19 வயது) அச்சமயம் அங்கு இருக்கவில்லை என்றும்—

அவர் நீர்வேலியில் உள்ள தனது பெற்றோரின் வீட்டுக்குச் சென்றிருந்தார் என்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடியில் என எச்சரிக்கை

கொழும்பு, மே 3

இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடியில் உள்ளது என்று இலங்கை மத்திய வங்கி எச்சரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று முன்தினம் விடுத்த விசேட அறிக்கை ஒன்றிலேயே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இலங்கையில் தொடரும் யுத்தமே இதற்கு முக்கிய காரணம் என்றும் அது தெரிவித்துள்ளது.

இலங்கையின் வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை உள்நாட்டு வருமானத்தில் 9.2 சத வீதமாகும். நாட்டில் பணவீக்கம் அதிகரிக்க இது வழிவகுக்கின்றது.

அத்துடன் கடந்த ஐந்து வருடமாக பொருளாதார வளர்ச்சியும் குறைந்துள்ளது. இந்த நிலை நாட்டுக்கு நல்ல அறிகுறியைக் காட்டவில்லை என்று அது தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வாழ்த்துகின்றோம்

வடமராட்சி கல்வி வலயத்தில் உதவிக்கல்விப் பணிப்பாளராக (நிர்வாகமும், முறைசாராக்கல்வியும்) பதவியேற்றிருக்கும்

திருமிகு

**சிவபாதம் நந்தகுமார்**

அவர்களை

(B. Com., Dip In Ed., S. L. E. A. S)

மேன்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய நண்பர்கள்
பருத்தித்துறை

(65384)


## தொடர் கருத்துரை

யாழ். திருமறைக்கலாமன்ற இயக்குநர் அருட் கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளார் வழங்கும் தொடர் கருத்துரை இன்று முதல் மூன்று நாள்கள் மாலை 5 மணி முதல் மன்ற கேட்போர் கூடத்தில் இடம் பெறவிருக்கிறது. (இ-3)

## உலகவங்கியின் உதவி குறித்து கலந்துரையாடல்

திருகோணமலை, மே 3

வடக்கு—கிழக்குக்கு உலக வங்கி வழங்கும் கல்விக்கான நிதியை எவ்வாறு பயன்படுத்துவது என்பது உட்பட பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு நாளை வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வியமைச்சுச் செயலருடன் கலந்துரையாடவிருக்கின்றது.

சங்கத்தின்தலைவர்சி.குமரகுருதாசன் தலைமையில் செல்லும் தூதுக்குழு கல்வி வலயங்களுக்கு ஆளணி நியமனம், ஆசிரியர் நியமனம், ஆசிரியர் இடமாற்றம், கல்விக் கல்லூரியை ஆரம்பித்தல் உட்படப்பல்வேறு விடயங்கள் குறித்து எடுத்துக் கூறும் என்று சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான அறிக்கை ஒன்றைத் தூதுக் குழுவுக்கு அனுப்பியுள்ளதாக சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்தார். [இ-3]


## வாழ்த்துகின்றோம்

எமது கிராமத்திலிருந்து முதன்முறையாக இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்வுபெற்றிருக்கும் எமது மண்ணின் மைந்தன்

**திரு. சுப்பிரமணியம் சுந்தரசிவம்**

அவர்களை வாழ்த்துகின்றோம்

பணிப்புலம் வாழ் பொதுமக்கள் சார்பில்
சு. சிவநேசராசன்

(65388)

**BOSCO**
25, றக்கா றோட்,
**A/L 99**
விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும்
திரு. V. யுகபாலசிங்கம் (M. A.)
ஆரம்பம்: 04 – 05 – 99
Tue., Thu. 6-30 (ப.நே.)
(65394)

**ராஜா** யாழ்ப்பாணம்.
இன்று முதல்
கார்த்திக் - ரம்பா - கவுண்டமணி - செந்தில் மற்றும் பலர் நடித்த
**உள்ளத்தை அள்ளித்தா**
காட்சிகள்: 10.30, 2-00, 5-00
(சி/7407)

**NEWTON Science Centre**
342, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
**O/L Day Class**
புதிய பிரிவு ஆரம்பம்: 05-05-99 (8 - 2 a.m.)
MATHS: T. அற்புதராஜா
S. சுந்தர்
SCIENCE: S. விக்கி
K. பாலமுருகன்
(65395)

யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்கான
**பொதுக் கூட்டம்**
காலம்: — 3-5-1999
நேரம்: — காலை 9-00 மணி
இடம்: — கைலாசபதி கலையரங்கு
அனைத்துப் பீட மாணவர்களும் தவறாது சமூகம் தரவும்.
- யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
(65392)

**சுனில் ஆட்ஸ்**
எம்மிடம் கழுவுவதற்காக 29 — 03 — 99 வரை ஒப்படைத்த படச்சுருள்கள் வந்துள்ளன. பெற்றுக்கொள்ளவும்.
**சுனில் ஆட்ஸ்**
272, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(03105)

**ராஜா 'B' திரை**
மம்முட்டி, மோகன்லால் நடித்த
ஹரி கிருஸ்ணன்ஸ்
10-30, 2-30
(சி/7385)

**எவலற் கல்வி நிறுவனம்**
[வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகில்]
90, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
**O/L DAY CLASS**
ஆரம்பம்: 05 – 05 – 1999
எமது ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| தமிழ் | — | திரு முகுந்தன், சசிகுமார் |
| கணிதம் | — | திரு சிவகணேசன், ரமேஸ் |
| விஞ்ஞானம் | — | திரு. சதீசன் |
| சமூகக்கல்வி | — | திரு. துஷ்யந்தன் |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |
| ஆங்கிலம் | — | திரு சிறீகரன் |
| சமயம் | — | திரு. குமார் |

குறிப்பு:- திறமையான அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் பாடங்களில் விசேட கவனம் எடுத்துக் கற்பிக்கப்படும்.
▲ தரம் 2 தொடக்கம் 11 வரையிலான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
▲ A/L 2000, 2001 கலை வர்த்தக வகுப்புக்களும் ஆரம்பமாக உள்ளன.
▲ தரம் 5 புலமைப்பரிசில் வகுப்புக்கான அனுமதியும் வழங்கப்படுகின்றது.
அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
[65387] — நிர்வாகி

**நாகம்ஸ்**
சுன்னாகம்.
ரஜனி - குஷ்பு - சரத்பாபு ஜனகராஜ் நடித்த
**அண்ணாமலை**
காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்)
(65307)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
இன்று முதல்
T. ராஜேந்தரின்
மோனிசா என் மோனலிசா
காட்சிகள்: 10-30, 2-30
Fax No. 070 212223
FOREIGN T.P. No. 0094 -70 -212223
(சி/7391)


## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை பாலசிங்கம்
(சிங்கர்)

நீர்வேலி வடக்கைச்சேர்ந்தவரும் பெற்றா எசன்ஸ் சப்பிளையேர்ஸ் 18/1, டாம் வீதி, கொழும்பில் கணக்காளராக இருந்தவருமாகிய செல்லத்துரை பாலசிங்கம் (சிங்கர்) 2- 5-99 இல் கொழும்பில் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
செ. பார்த்திபன் (மருமகன்)
(இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்.)
இராசவீதி,
நீர்வேலி வடக்கு.
(65391)

### திருமதி சிறிபதி மகேஸ்வரி

உடுப்பிட்டி சந்தை வீதியைச் சேர்ந்த திருமதி சிறிபதி மகேஸ்வரி 02 - 05 - 1999 அன்று காலமானார்.

இவர் புலோலி கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கம் தங்கச்சியம்மா தம்பதிகளின் மகளும், உடுப்பிட்டி சிறிபதி அவர்களின் அன்பு மனைவியும், முருகதாஸ் (கனடா), பரமதாஸ் (கனடா), கண்ணதாஸ் கனடா), கணேசதாஸ் (சுவிஸ்), அருள்தாஸ் (அருள் ஜூவல்லர்ஸ், உடுப்பிட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சற்குணதேவி (கொழும்பு), ரதிதேவி (கனடா), புஸ்பரதி (கனடா), விஜிதா (சுவிஸ்) ராஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி தெய்வேந்திரம் ராஜம்மா, திருமதி அம்பிகாபதி சரஸ்வதி, திருமதி நவரத்தினம் சோதிமதி, திருமதி சற்குணலிங்கம் புஸ்பராணி, திரு. சங்கரலிங்கம் (ஓய்வுபெற்ற நில அளவையாளர், புத்தளம்), திருமதி தங்கராசா பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவாஜினி, லோஜினி, லதா, சங்கீதா, ரூபிதா, சாருகன், அனுசன், மலரவன், ஆரணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-05-99) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இமையாணன் வல்லை மயானத்தில் தகனம் செய்யப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிறிபதி (கணவர்)
அருள்தாஸ் (மகன்)
சந்தை வீதி,
உடுப்பிட்டி.
(65389)


**ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்**
சுன்னாகம்
**கௌமார பஞ்சகுண்டயாக மஹோற்சவம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஆம் நாள் | கொடியேற்றம் | — 03-05 99 | திங்கள் | மு. ப. 9-30 | மணி |
| 9 ஆம் நாள் | வேட்டைத்திருவிழா | — 11-05-99 | செவ்வாய் | பி. ப. 1-30 | மணி |
| 10 ஆம் நாள் | சப்பறம் | — 12-05 99 | புதன் | பி. ப. 5 00 | மணி |
| 12 ஆம் நாள் | தேர்த்திருவிழா | — 14-05-99 | வெள்ளி | மு. ப. 9-30 | மணி |
| 13 ஆம் நாள் | தீர்த்தம் | — 15-05-99 | சனி | மு. ப. 10 00 | மணி |
| 14 ஆம் நாள் | சண்டேஸ்வரர் திருவிழா | — 16-05-99 | ஞாயிறு | பி. ப. 3-00 | மணி |
| 15 ஆம் நாள் | சங்காபிஷேகம் (1008) | — 17-05-99 | திங்கள் | மு. ப. 9-00 | மணி |
| | பூங்காவனம் திருக்கல்யாணம் | | | பி. ப. 4-00 | மணி |

விளம்பரம்: கரன் புகைசன்ரர் ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.
(65386)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளணி முகாமைத்துவ குறைபாடுகளை நீக்குக

## பல்கலை ஊழியர் சங்கம கடிதம்

யாழ்ப்பாணம், மே 3

யாழ். பல்கலைக் கழக ஆளணி முகாமைத்துவத்தில் காணப்படும் குறைபாடுகள் உடனடியாகச் சீர் செய்யப்படல் வேண்டும் என உலக தொழிலாளர் தினமான மே தினத்தை ஒட்டி யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பதினான்குவிடயங்களைச் சுட்டிக் காட்டி சங்கத்தினால் எழுதப்பட்ட விரிவான கடிதமொன்றில் இம் முகாமைத்துவ குறைபாடுகள் பல்கலைக் கழக கல்வி முகாமைத்துவத்துக்கு காலப்போக்கில் ஊறு விளைவிக்கும் அபாயம் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் சகிதம் உத்தியோகபூர்வ கலந்துரையாடல் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்து தருமாறு சங்கம் துணைவேந்தரிடம் கோரி உள்ளது. (ஐ-க)

# இளைஞர்களிடையே போட்டி நடத்தி பரிசளிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம் மே 3

தமிழ் இளைஞர் யுவதிகளின் கலாசார திறன்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் இளைஞர் பரிசளிப்பு விழா ஒன்று நடத்தப்படவுள்ளது.

குறுநாடகம், நடனம், கிராமிய நடனம், புதிய நடனம், நாட்டிய நாடகம், கிராமிய நடனம், புதியபாடல், சாஸ்திரிய பாடல், சாஸ்திரிய வாத்தியங்கள், மேற்கத்திய வாத்தியங்கள், அறிவிப்பாளர், பேச்சு, அபிநய நடிப்பு, கவிதையாக்கம், சிறுகதை கட்டுரை, நாவல், சிறுவர் இலக்கிய படைப்புக்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலி நாடகம், ஓவியம், புகைப்படக்கலை, சிற்பம், நாட்டுக்கூத்து, இளைஞர்களின் புதிய கண்டுபிடிப்புகள் உட்பட பல போட்டிகள் நடத்தப்பட்டு இதில் வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்கும் பொருட்டு இந்த இளைஞர் பரிசளிப்பு விழா நடைபெறவுள்ளது.

மேற்குறிப்பிட்ட போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் யாழ்.மாவட்டத்திலுள்ள இளைஞர் யுவதிகள் தேசிய இளைஞர் சேவைமன்ற யாழ். மாவட்ட காரியாலயத்துடன் அடுத்த மாதம் 15ம் திகதிக்கு முன் தொடர்புகொண்டு தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள இளைஞர்கள் சேவைமன்ற அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு இது தொடர்பாக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று மாவட்ட உதவி இயக்குநர் தி. சிவதட்சணாமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஐ-5)

# மண்டபம் புனரமைப்பு

கோப்பாய் வடக்கு ஞான பண்டித சைவ அபிவிருத்திச் சங்கத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த கலாசாரமண்டபத்தை புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் சங்க நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது

# கூட்டுறவு சங்கத்தில் விலை குறைப்பு

அரியாலை, மே 3

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தேங்காயின் விலையைக் குறைத்துள்ளது

சங்கத்தின் கிளைகளில் 37 ரூபாவாக விற்கப்பட்ட தேங்காய் ஒன்று தற்போது 34 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் சி. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

இதேசமயம் —

குத்தரிசியை கிலோ 34 ரூபாவுக்கு தாராளமாக பாவனையாளர்கள் கிளைகளில் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-17)

# பொருட்காட்சி

சங்கானை, மே 3

அளவெட்டி தென் இந்திய திருச் சபை பேராயத்தினால் நடத்தப்படும் தொழிற் பயிற்சி நிலையத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பொருட் காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நடைபெறவுள்ளன.

மூன்று நாள்கள் நடைபெறும் இந்த பொருட் காட்சியில் மேற்படி நிலைய மாணவர்களின் ஆக்கங்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன. (க-29)

# புலிகளுக்கு உதவியதாக ராணுவ கோப்ரல் கைது!

கொழும்பு, மே 3

புலிகளுக்கு தகவல் பரிமாற்று இயந்திரங்களை அனுப்ப உதவினார் என்ற சந்தேகத்தில் இராணுவ கோப்ரல் ஒருவர் இராணுவப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

வவுனியாவிலிருந்து உயிலங்குளம் தடைமுகாம் ஊடாக குறிப்பிட்ட இயந்திர சாதனங்களை எடுத்துச் செல்ல வர்த்தகர் ஒருவருக்கு இந்த இராணுவ கோப்ரல் உதவினார் என்றும் —

இதற்காக அந்த வர்த்தகரிடமிருந்து 40 ஆயிரம் ரூபாவைப் பெற்றுள்ளார் என்றும் — இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்குறிப்பிடப்பட்ட வர்த்தகர் புலிகளுக்குரிய பொருள்களை வன்னிக்கு எடுத்துச் செல்வதற்கு அந்த இராணுவ கோப்ரல் பல தடவைகள் ஒத்துழைப்பு வழங்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-ரீ-5)


## வாழ்த்துகின்றோம்

இன்று (03 - 05 - 99) திங்கட்கிழமை சரசாலை ஸ்ரீவீரமாகாளி அம்பாள் சந்நிதானத்தில் அம்பிகையின் திருவருளுடன் குருப்பட்டம் பெறும்

சிரஞ்சீவி

**கிருபாகரசர்மா**

அவர்களை சரசாலை மக்களுடன் நாமும் வாழ்த்துகின்றோம்.

ஐ. பத்மநாதன் குடும்பம்

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

[சி/7408]



## இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பு

தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ''வீர மகனே'' உங்களையும் வரவேற்கின்றோம்.

இலங்கை இராணுவத்தின்
நிரந்தர பிரிவில் சாதாரண
சிப்பாய்களுக்கான வெற்றிடம்

### தேவையான அடிப்படைத் தகைமைகள்:

18 வயதிற்கு மேல் 28 வயதிற்கு உட்பட்டவர்கள்.
உயரம் 5 அடி இரண்டு அங்குலம்.
திருமணம் முடிக்காத இலங்கைப் பிரஜை,
குறைந்தது 8 ஆம் வகுப்பில் (9 ஆம் ஆண்டில்) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

### தேவையான சான்றிதழ்கள்:

★ பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதி)
★ கல்விச் சான்றிதழ்களுடன், பாடசாலையை விட்டு விலகிய சான்றிதழ் கிராம உத்தியோகத்தரின் நம்பிக்கைக் கடிதம் (6 மாத காலத்திற்குள் பெறப்பட்டது).
★ அரச அதிகாரிகள் இருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இரு அறிமுகசான்றிதழ் (6 மாதத்திற்குட்பட்டவை)
★ நம்பக்கூடிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம்.

மாதமொன்றுக்கான ஆரம்பக் கொடுப்பனவு ரூபா 4,080

யுத்தப் பிரதேசத்தில் கடமையாற்றும் திருமணம் முடிக்காத சிப்பாய் ஒருவருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுக்கு மேலதிகமாக ரூபா 3,470 வழங்கப்படும்.

யுத்தப் பிரதேசத்தில் (கஷ்ட) கடமையாற்றும் திருமணம்முடித்தசிப்பாய்ஒருவருக்குவழங்கப்படும் ஆரம்பக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக ரூபா 5,120 வழங்கப்படும்

யுத்தம் நடைபெறாத பகுதியில் கடமையாற்றும் திருமணம் முடிக்காத சிப்பாய்களுக்கு வழங்கப்படும் ஆரம்பக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக ரூபா 1,090 வழங்கப்படும்.

யுத்தம் நடைபெறாதபகுதியில் திருமணம் முடித்த ஒருவர் கடமையாற்றினால் ஆரம்பக்கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக ரூபா 2,740 வழங்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட சலுகைகளுக்கு மேலதிகமாக திருமணம்முடித்த/முடிக்காதவர்களுக்காகஇலவச சீருடைகள், உணவு, பிரயாணச்சலுகை, சுகாதார வசதிகள், தங்குமிட வசதிகள் போன்றவை செய்து கொடுக்கப்படும்.

1999–05–03 ஆம் திகதி தொடக்கம் 1999 05 22 ஆம் திகதி வரையிலும் அரியாலை இராணுவ முகாமிலும், சாவகச்சேரி இராணுவ முகாமிலும் நேர்முகப் பரீட்சைகள் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் நடைபெறும்.

இலங்கை இராணுவம்.

(இளைய தலைமுறை – புதிய உலகம்)

(சி/7403)


சேர்பியாவில் பிடிபட்ட

# அமெரிக்க வீரர்களைக் கையளிக்க இணக்கம்

பெல்கிரேட், மே 3

போர்க் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட அமெரிக்க இராணுவ வீரர்கள் மூவரை ஒப்படைக்க யூகோ. அதிபர் மிலோசேவிக் இணக்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் மெசிடோனியா யூகோஸ்லாவிய எல்லைப் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையே இவர்கள் சேர்பியப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அமெரிக்க மனித உரிமை இயக்கத் தலைவர் ஜெஷி ஜக்சனிடம் இந்த இராணுவ வீரர்கள் ஒப்படைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-க)

# வெப்பத்தினால் 52 பேர் இந்தியாவில் மரணம்

புதுடில்லி, மே 3

இந்தியாவில் வெப்பத்தினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 52 ஆக உயர்ந்துள்ளது.

பீஹார் மற்றும் ஒரிஸா மாநிலங்களிலேயே வெப்பத்தினால் மக்கள் இறந்துள்ளனர்.

இந்த மாவட்டங்களில் தற்போது வெப்பத்தின் அளவு 45 டிகிரி செல்சியசைத் தாண்டியுள்ளது. இதனால் இறப்பவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கடந்த ஆண்டு ஒரிஸா மாநிலத்தில் மட்டும் இரண்டாயிரம் மக்கள் வெப்பத்தினால் இறந்து போனமை குறிப்பிடத்தக்கது. (இ-க)

மொஸ்கோ நகரில்

# அணுக்கதிர் செறிந்த பழங்கள் விற்பனை

மொஸ்கோ, மே 3

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் பழக்கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த கதிர் இயக்கம் செறிந்த பழவகைகள் சுகாதார அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சுமார் 660 கிலோ எடையுடைய பழங்கள் உடனடியாக அழிக்கப்பட்டன. அவற்றில் அளவுக்கு அதிகமாக கதிர் இயக்கம் பரவி இருப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

பெலாரஸ், உக்ரைன் ஆகிய இடங்களில் இருந்து விற்பனைக்காக வந்தபழ வகைகளிலேயே அணுக்கதிர் செறிவு காணப்பட்டது.

1986 ஆம் ஆண்டு செர்னேஸில் அணு ஆலையில் ஏற்பட்ட கசிவினால் உக்ரைன். பெலாரஸ் உட்பட ரஷ்யாவின் பெரும் பகுதிகள் பாதிக்கப்பட்டன. (ஐ)

# அல்பேனிய அகதிகளுக்கு கோரிக்கை

லண்டன், மே 3

ஐரோப்பா அல்லாத ஏனைய நாடுகள் அல்பேனிய அகதிகளை பாதுகாப்பாக அழைத்துச் செல்ல உதவ வேண்டும் என்று அகதிகளுக்கான ஐ.நா. உயர் அதிகாரி அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

அல்பேனியா, மற்றும் மெசிடோனியாவில் உள்ள அகதி முகாம்களில் அல்பேனிய அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைத் தொடர்ந்து அங்கு இடநெருக்கடி மற்றும் உணவு, மருந்துப் பொருள்களுக்கு பற்றாக் குறை நிலை ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

# பிரிட்டனில் தஞ்சம்

இஸ்லாமாபாத் மே 3

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார் என்று வெளியான தகவல்களை முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸீர் பூட்டோ மறுத்துள்ளார்.

தமக்கு எதிராகப் பிறப்பித்த கைது உத்தரவுகளை உயர் நீதிமன்றம் நிறுத்தி வைத்ததும் தான் சொந்த நாடு திரும்ப உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பம் எதுவும் திருமதி புட்டோவிடம் இருந்து கிடைக்கவில்லை என்று [illegible] அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ஐ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

பண்ணாகம்மெய்கண்டான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பரந்தாமன் ஜெயக்குமார் என்பவரது விசேட அ. அட்டை. யாழ்ப்பாணத்துக்கும், தாவடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் லக்ஷன் வீடியோ சென்ரர், 320, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (65378)

401, கே.கே. எஸ். வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அண்ணாமலை சக்திவேல் என்பவரதுதேசிய அ. அட்டை (593021629V) விசேட அ. அட்டை (0902029836) என்பன 24-4-99இல் கே.கே.எஸ். வீதிக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 290, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (65361)

இல 99, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாலசுந்தரம் விஜயராணி ஆகிய எனது விசேட அடையாள அட்டை, ஆலடிச்சந்திக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் விலாசத்தில் அல்லது இலுப்பையடிச் சந்தியில் உள்ள கடையில் ஒப்படைத்து உதவவும். (65364)

க.கலாவதி என்பவருடைய தேசிய, விஷேட அடையாள அட்டைகள் இரண்டும் 28-04-99 அன்று சுன்னாகத்திற்கும் மல்லாகத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சுமங்கலி ஜுவல்லர்ஸ் 118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலோ அல்லது அடையாள அட்டையில குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலோ ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (65343)

## விற்பனைக்கு

ஜமுனாபாரி பால் ஆடுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆறுமுகம் இல 02 பேரின்பநாயகம் லேன், கண்டி வீதி, யாழ்ப்பாணம். RDA காரியாலயத்துக்கு முன்பாக) (65336)

## அதிபர் பதவிப் படிவம்

இலங்கை அதிபர்கள் சேவையில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை விண்ணப்பப்படிவங்கள் விற்பனையாகின்றன. பாரதி 430, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் (சி/7348)

## SALE

Household Furniture and Electrical Goods like Refrigerator Electric Cooker Gas Cooker Fans Electric Kettle. Electric Iron Pressure Cooker for Sale Rasiah 22, St. Annes Road. (Near St Annes. Church, Colombogam Road), Chundikuli, Jaffna (65292)

# கட்டாக்காலி கால்நடைகள் தொல்லை

வரணி, மே 3

வடமராட்சி கிழக்கு குடத்தனை, அம்பன் பகுதியில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்துள்ளது. வரணிப் பகுதியிலுள்ள கட்டாக்காலி மாடுகளே குடத்தனைப் பகுதிக்கு வருவதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். (ஐ-171)

# கண்ணீர் அஞ்சலி

எமது வகுப்பு மாணவனான
செல்வன் ம. சுவேந்திரனின்
அன்புத் தந்தையார்


## செல்லையா மகேந்திரன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

க. பொ. த [உ/த] 2000
(வர்த்தகப் பிரிவு)
யாழ். இந்துக் கல்லூரி

(65380)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 25 |
| — | — |
| 08 | 04 |
| — | — |
| 1926 | 1997 |

## திருமதி செல்வராணி சுப்பிரமணியம்

திதி: 03 - 05 - 99

ஆண்டு இரண்டு சென்றதம்மா
ஆறவில்லை எம்துயரம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்தித்து உங்கள் நினைவில் வாழும்

கணவன்,
(ஒய்வுபெற்ற பிரதம லிகிதர்
யாழ்.போதனா வைத்தியசாலை)

'ஸ்ரீ புவனம்',
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்,

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

[65187]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 15 | 03 |
| — | — |
| 11 | 04 |
| — | — |
| 1919 | 1999 |

திருமதி

## தவமணி நாகலிங்கம்

அல்லும் பகலும் உங்கள் அரவணைப்பில்
இருந்தோம் அம்மா!
அன்பில் உதிரும் உங்கள் வதனத்தில்
மகிழ்ந்தோம் அம்மா!
கண்ணை இமை காப்பது போல்
காத்தீர்கள அம்மா!
உங்களை இழந்து நாம் உரக்க அழுகின்றோம்
அம்மா!
கட்டிலில் புரண்டழுதோம் கண்களையே இழந்து
நின்றோம் அம்மா!
கட்டிய கோட்டையெல்லாம் கணப்
பொழுதில் கரைந்ததம்மா!

உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைஞ்சுகின்றோம்
அவன் பாதம்.

இன்று (03 — 05 — 1999) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல 4 (158), 1 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(வேம்படிக்கு முன்பாக) (65381)

# நெடுந்தீவில் இருந்து குமுதினி படகுச்சேவை

நெடுந்தீவு, மே 3

நெடுந்தீவுச் சேவையில் உள்ள குமுதினி மோட்டார் படகை நயினாதீவில் நிறுத்தி அங்கிருந்து நெடுந்தீவுக்கு வழமையான சேவையை மேற்கொள்வது குறித்துப் பாதுகாப்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நெடுந்தீவு பிரதேச சபைக்கு அறிவித்துள்ளார்.

தற்சமயம் ஊர்காவற்றுறையில் இருந்து சேவை இடம்பெறுவதால் குமுதினி ஒரு தடவை மட்டுமே சேவையில் ஈடுபடக்கூடியதாக உள்ளது.

குறிகாட்டுவான் துறைமுகத்தில் இருந்து காலையில் நெடுந்தீவுக்கான கடல் போக்குவரத்துச் சேவை இடம்பெறும் பட்சத்தில் தினசரி இரு தடவைகள் படகுச் சேவை நடைபெறக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-111)

# விசேட அ. அட்டைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 3

குருநகர் கிழக்கு (ஜே-70) கிராம அலுவலர் பிரிவுக்கான விசேட அடையாள அட்டைகள் இன்று திங்கட்கிழமை 9.30 மணியளவில் குருநகர் இராணுவ முகாமில் வைத்து வழங்கப்படவுள்ளதாக கிராம அலுவலர் அறிவித்துள்ளார். (க)

# STUDY CIRCLE

ஆலங்கட்டை வீதி, கொற்றாவத்தை.

## O/L 99 DAY CLASS

(துரித மீட்டல் வகுப்பு)

ஆரம்பம்: 05 — 03 — 99 புதன்
காலை 8 00 மணி

(65383)

# NEW BRIGHT

## கல்வி நிலையம்

யாழ். மாட்டின் வீதி.

ஆண்டு 9, 10, 11, [O/L]

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு. வசீகரன் |
| கணிதம் | — திரு. அருள்நேசன் |
| தமிழ் | — திரு. ராஜா |
| சமூகக்கல்வி | — திரு. திருச்செல்வநாதன் |
| வர்த்தகம் | — திரு. இராஜ்கலிஸ்ரஸ் |
| சித்திரம் | — திரு றுக்ஷான் |
| ஆங்கிலம் | — திரு S E. நேசன் |

★ O/L மீட்டல் பயிற்சி வகுப்புக்களும்,
★ ஆண்டு 8, 7, 6, 5, 4, 3, 2, 1 வகுப்புக்கள்
★ 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை வகுப்புக்களும்,

ஆசிரியர்
திரு. ஆ. வே. துரைரத்தினம்

★ தமிழ்/ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புக்களும்,
★ ENGLISH — Spoken with Grammar

வகுப்புகளும் நடைபெறுகின்றன.

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

[65382] -நிர்வாகி.

# யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை

1998 ஜீ. சீ ஈ சாதாரண தர பரீட்சையில்
மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றோர் விவரம்

| | |
|---|---|
| ★ உஷானந்தினி ஸ்ரீகணேசலிங்கம் | — 8 D |
| ★ ராஜாராம் மயூரன் | — 7DC |
| ★ யாழினி வெள்ளியம்பலம் | — 7DC |
| ★ கேனுகா வரதராஜ | — 6DCS |
| ★ சங்கீதா முருகதாஸன் | — 6D2C |
| ★ விஜயசிறி ஸ்ரீகாந்தன் | — 6D2C |
| ★ சிவசுந்தரம் சிவரூபன் | — 5D2CS |
| ★ ஆரணி சிதம்பரநாதன் | — 5D3C |
| ★ பவித்திரா பொன்னம்பலம் | — 5D3C |
| ★ திசானி ஜெயவீரசிங்கம் | — 5D3C |

இவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

பெற்றோர், பழைய மாணவர்கள்,
நண்பர்கள்.

(சி-7400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதான பல்கலைக்கழக மாணவர்கள்

# விசாரணைகள் முடிவடைந்து துணைவேந்தரிடம் ஒப்படைப்பு

### பலாலித் தலைமையகம் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 3

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டது தொடர்பாக யாழ். மாவட்டப்படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எல். சீ. ஆர். குணவர்த்தன கையொப்பமிட்டு உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் விடுக்கப்பட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

1. 1999 ஏப்ரல்மாதம் 29-ம் திகதி கிடைக்கப்பெற்ற தகவலின்படி யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டிருக்கும் மாணவர்கள் இருவரை விசாரணை செய்வதற்காக இராணுவத்தினர் கைது செய்தனர். ஆனால் மாணவர்களுக்கெதிராக கீழ்க்காணப்படும்குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்தன.

அ) பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக, பயங்கரவாத உறுப்பினர்களுடன் கலந்துரையாடியமை

ஆ) விடுமுறைக்கு வன்னிப் பகுதிக்குச் செல்லும் இவர்கள் தமது பல்கலைக்கழக அடையாள அட்டைகள், பல்கலைக்கழக ஆவணங்கள், அடையாள அட்டைகள் போன்றவற்றை பயங்கரவாதிகளிடம் கையளித்தல்.

இ) பயங்கரவாத உறுப்பினர்களின் ஆயுதங்களை தற்காலிகமாக மறைத்து வைத்திருந்தமை

ஈ) பயங்கரவாத நபர்களுடன் தொடர்பு கொண்டு, மற்றையவர்களையும் பயங்கரவாதிகளுடன் தொடர்பு படுத்த உதவியமை.

2. இந்த மாணவர்களிடம் மேலதிக விசாரணைகளை நடத்துவதற்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன், விசாரணைகள் முடிவடைந்தவுடன் பல்கலைக்கழக துணைவேந்தரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

(ஐ)

## சர்வதேச சித்திரப் போட்டி;

# வடமராட்சி மாணவர் மூவருக்குப் பதக்கம்

செம்பியன்பற்று, மே 3

சர்வதேச சிறுவர் சித்திரப் போட்டியில் பங்குபற்றிய வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று அரசினர் தமிழ்கலவன் பாடசாலை மாணவர்கள் மூவர் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

1998 ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டில் நடத்தப்பட்ட 28 ஆவது சர்வதேச சிறுவர் சித்திரப்போட்டியில் 75 நாடுகளைச் சேர்ந்த 2 லட்சத்து 47 ஆயிரத்து 293 போட்டியாளர்கள் பங்கு பற்றினர் இவர்களில் 10 பேருக்கு தங்கப்பதக்கமும், 260 பேருக்கு வெள்ளிப் பதக்கமும் 381 பேருக்கு வெண்கலப்பதக்கமும் வழங்கப்பட்டன.

இவர்களில் வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று அரசினர் தமிழ்கலவன் பாடசாலையைச் சேர்ந்த 1. விநாயகமூர்த்தி, கஜன், 2. இராசேந்திரம் மதிவதனன் ஆகிய இருவரும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றனர்

கந்தசாமி - அருள்வதனி என்பவருக்கு வெண்கலப் பதக்கமும் கிடைத்தது. இவர்களிற்கான சான்றிதழும் பதக்கங்களும் ஜப்பான் நாட்டில் இருநது தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

போட்டியில் பங்குபற்றிய மாணவர்களையும் சித்திர ஆசிரியையும் வடமராட்சி வலயப் பணிப்பாளரும் மருதங்கேணி உதவி அரச அதிபரும் பாராட்டியுள்ளனர்.

(ஐ-36)

## வலிகாமம் வலயத்தில்

# ஆசிரியர்களுக்கு விரைவில் தேக்கநிலைசம்பள உயர்வு

வலிகாமம் தெற்கு, மே 3

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுள் ஆசிரிய தரத்தில் உச்சநிலை சம்பளம் பெறுவோருக்கான தேக்கநிலை சம்பள உயர்வுகள் வழங்கப்பட உள்ளன.

பலகாலமாக உச்ச நிலை சம்பளம் பெறும் ஆசிரியர்கள் பலருக்கு அவர்களுக்கான உரிய சம்பளங்கள் வழங்கப்படாமையால் தேக்கநிலை இருந்து வந்தது.

தேக்கநிலை சம்பள உயர்வு மே மாதச் சம்பளத்துடன் உரிய ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் என வலிகாமம் கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர் ச. வீரசிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-152)


## பாராட்டி வாழ்த்துகிறோம்

யா / கொழும்புத்துறை
துரையப்பா வித்தியாலய மாணவி

## செல்வி சுகந்தி யோகராசா

1998 க. பொ. த. (சாதாரண) பரீட்சையில்
6D, 2C பெறுபேறு பெற்றமைக்காக
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருந்தி சங்கத்தினர்,
பழைய மாணவர் சங்கத்தினர்.

(65367)


## ஆலயம் புனரமைப்பு

வரணி, மே. 3

வடமராட்சி கிழக்கு குடத்தனை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் ஜூன் மாதம் பிரதிஷ்டை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது

(ஐ-171)

## நீரிறைக்கும் இயந்திரம்

வேலணை, மே 3

வேலணை பிரதேச சபையினரால் நயினாதீவு உப அலுவலகத்திற்கு நீர் இறைக்கும் இயந்திரம் மூன்று வழங்கப்பட்டுள்ளது;

மேற்படி நீர் இறைக்கும் இயந்திரத்தினை வேலணை பிரதேச சபை தலைவர் நயினாதீவு உப அலுவலகப் பொறுப்பதிகாரியிடம் கையளித்தார்.

(ஐ-167)


## சாரதிக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது

இரண்டு சில்லு உழவு இயந்திரம் செலுத்துவதிலும், உழவு வேலை செய்வதிலும். தோட்ட வேலையிலும் முன் அனுபவமுள்ளவர்கள் 10 - 05 - 99க்கு முன் விண்ணப்பிக்கவும்.

தகுதி: ① வயதெல்லை 30 — 50
* நல்லூர், யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவினுள் வசிப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
சுமநல கேந்திர நிலையம்,
நல்லூர்.

[65259]


## திருமலையில் மின் மாற்றி தகர்ப்பு

திருகோணமலை, மே 3

திருகோணமலை நகரப் பகுதியிலுள்ள மட்டத்தடிச் சந்தியில் பொருத்தப்பட்டிருந்தமின்மாற்றிகடந்தவெள்ளியன்று நள்ளிரவு 2. 30 மணியளவில் குண்டுத் வைத்துத் தகர்க்கப்பட்டது.

இதேவேளை திருகோணமலை மின்சார நிலைய வீதியிலுள்ள புதிய மரக்கறிச் சந்தைக்கு அண்மையிலுள்ள மின் மாற்றிக்குள் வைக்கப்பட்டிருந்த குண்டு பொலீஸாரினால் மீட்கப்பட்டது.

இந்தக் குண்டு மீட்கப்பட்டதைத் தொடர்ந்து திருகோணமலை நகரப் பகுதியிலுள்ள மின் மாற்றிகள் அனைத்துக்கும் பொலீஸாரினால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

(இ-5-7-க)


The Express Institute
IRUPALAI KOPAY

யாழ்.நகரின் முதன்மையான ஆசிரியர்களின்
இணையற்ற சேவையில்.........
27 வது ஆண்டில்
O/L DAY CLASS
(8.30 A M. — 1.30 P. M)
மே — 05 இல் ஆரம்பம்
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன:

(65373) —அதிபர்


## தோடை மரச் செய்கை

தென்மராட்சி, மே 3

எழுதுமட்டு வாழ் தெற்குப் பகுதியில் தோடைமரச் செய்கையை ஊக்குவிக்க இப்பகுதி விவசாயிகளுக்கு தோடை மரங்களை மானிய அடிப்படையில் பெற்றுக் கொடுக்க எழுதுமட்டுவாழ் தெற்கு விவசாய சம்மேளனம் கொழும்பு விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

தோடை மரக் கன்றுகளை உற்பத்தி செய்ய விரும்பும் விவசாயிகள் தமக்குத் தேவையான கன்றுகளின் விவரத்தை சம்மேளன செயலாளரிடம் பதிவு செய்யுமாறு சம்மேளனத் தலைவர் இ. தெய்வேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

(ஐ-171)

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சின்னப்பிள்ளை குலவீரசிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
### இராசமணி நல்லதம்பி

அவர்களது மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள், மாணவர்கள்.
கிளி/ வேம்பொடுகேணி
சி. சி. த. க. பாடசாலை.

(65314)


JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
TECHNICAL COMPETENCE IS THE KEY TO ECONOMIC SELF RELIANCE

# JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
## யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்
இலவச விவசாய
## பயிற்சி நெறிகள்

விவசாய டிப்ளோமா, விவசாய குறுகியகாலப் பயிற்சி ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விவசாயத்தை சுய தொழிலாக மேற்கொள்ள விரும்பும் அல்லது தொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்ள விரும்பும் ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. DIPLOMA IN AGRICULTURE
விவசாய டிப்ளோமா பயிற்சிநெறி

ஒரு வருடகால சாதனா, போதனா பயிற்சிநெறி க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த 17—25 வயதுக்கிடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். இக் கற்கை நெறியில் விவசாய மூலதத்துவம், பயிரியல், மிருக பரிபானலம், பூங்கனியியல், பண்ணை முகாமைத்துவம், கமபொறியியல் (ஆண்கள்) மனைப்பொருளியல் (பெண்கள்), ஆங்கிலம் ஆகிய பாடங்கள் போதிக்கப்படும்.

2. SHORT COURSE IN AGRICULTURE
குறுகிய கால விவசாயப் பயிற்சி

4 மாத காலம் விவசாய மூலதத்துவம், பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபாலனம் ஆகிய துறைகளில் அடிப்படைப் பயிற்சிகள் வழங்கப்படும். க. பொ. த. சாதாரண தரம் கல்வி கற்ற 16—26 வயதுக்கிடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இரு பயிற்சி நெறிகளின் காலத்தில் உதவுதொகை வழங்குவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறிகளில் சேர விரும்புவோர் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு 10 05-99 இலும் குறுகிய கால பயிற்சி நெறிக்கு 11-05-99 இலும் காலை 9. 00 மணிக்கு எமது நிறுவனத்தில் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்விப்பத்திரம், கிராம சேவகரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:—

அதிபர்
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம்.

[65274]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் செல்லத்துரை வரதலிங்கம்

(இளைப்பாறிய அதிபர், யாழ் / வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம், முன்னாள் யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளர்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1929 — 09 — 25 | 1990 — 05 — 12 |

திதி: 1999 — 05 — 03

ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்திடினும் தொடரும் உங்கள் பசுமையான நினைவுகள்.

— குடும்பத்தினர்

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

(65350)

## பட்டிமன்றச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், மே 3

யாழ்ப்பாணம் நகரமைய றோட்டரக்ட் கழகம் நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான பட்டிமன்றச் சுற்றுப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (இ-7)

## கலைமகள்

கல்வி நிலையம்
டச்சு றோட், சாவகச்சேரி.

A/L 2001
புவியியல்
by: திரு. நித்தி

ஆரம்பம்: 06 - 05 - 99
வியாழன் 3-30 மணி.

(சி/7393)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2 ஆம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459

(65134)

## உளமார வாழ்த்துகின்றோம்

யா / அல்வாய் வடக்கு றோ. க. த. க பாடசாலையிலிருந்து முதன் முறையாக க. பொ. த. [சா / த] பரீட்சைக்குத் தோற்றிய

| | | |
|---|---|---|
| செல்வன் | த. முகுந்தன் | 4D 2C 2S |
| செல்வன் | அ. அன்ரனி டினெக்ஸ் | D 2C 3S |
| செல்வன் | த. கமலதீபன் | 5C 2S |
| செல்வன் | இ விஜயரூபன் | 4C 3S |
| செல்வன் | இ. அமலதாஸ் | C 5S |
| செல்வி | நா. ஜெனனி | 4C 2S |
| செல்வி | சூ. தாட்சாயணி | 3C 3S |

பெறுபேறு பெற்றுக்கொண்டமைக்காக ஆக்கமும் ஊக்கமும் அளித்த டி பாடசாலை அதிபரையும், ஆசிரியர்களையும் உளமார வாழ்த்துகின்றோம்.

யா / அல்வாய் வடக்கு றோ. க. த. க.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(சி/7389)

## MATHS CENTRE

M. M. V. ROAD, NELLIADY.

புதிய பிரிவு -- II

### [கலை, வர்த்தகம்]

### A/L 2001

(ஆரம்பத்தில் இருந்து)

- ★ அளவையியல் — திரு. பிரபானந்தன்
- ★ தமிழ் — திரு. கமலரூபன்
- ★ இந்துநாகரிகம் — திரு. இராஜேஸ்கண்ணா
- ★ பொருளியல் — திரு. அன்ரனி
- ★ வணிகக்கல்வி — திரு. உதயமோகன்
- ★ கணக்கீடு — திரு. பார்த்தீபன், பிரபாகரன்.

O/L பரீட்சையில் கணிதபாடத்தில் சித்தி அடையாத மாணவர்களுக்கு விசேட இலவச கணித வகுப்புகள் நடைபெறும்.


ஆரம்பம் :- 5 — 5 — 99 புதன் 4.00 p.m.

[65358]

# 13 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

(சித்திரை 29 - வைகாசி 6)

உயிர் நீத்த உடன் பிறப்புக்களுக்கு



மீண்டும் எம் கண்ணீர் அஞ்சலி

மறைந்த தலைவர்

## அமரர் சிறீசபாரெத்தினம் அவர்கள்

அன்னைத் தமிழ் மண்ணில் அழுகுரல்கள் ஓய்ந்து
அனைத்துச் சுதந்திரமும் அரசோச்சும் பொற்காலம்
விரைவாய் மலர்ந்து எங்கள் வீரர் கனவுகளை
விதைகளாய்த் தூவிடவே துணிந்து செயற்படுவோம்!

TELO

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
(ரெலோ)

[65534]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### முன்னுதாரணமாக நிலைக்குக

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிக்கு, உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை உயிலங்குளம் ஊடாக வாகன அணி மூலம் எடுத்துச் செல்வதற்கு ஏற்பாடாகி உள்ளது. இது வரவேற்கப்பட வேண்டியதாகும்.

வாகனஅணிசெல்வதுசம்பந்தமாக அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் உண்டான இணக்கப்பாடு எவ்வித இடைஞ்சலும் இன்றித் தொடர வேண்டும் என்பது வன்னி வாழ் மக்களின் விருப்பம் மட்டும் அல்ல; அவர்களின் இரத்தத்தின் இரத்தங்களான சகல ஈழத் தமிழ் மக்களினதும் பிரார்த்தனையும் அதுவே.

இத்தகைய ஓர் இணக்க நிலையை உருவாக்குவதற்கு உழைத்த — பாடுபட்ட— செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பங்குபணியும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

வன்னிக்கு உணவுப் பொருள்கள் உட்பட ஏனையபாவனைப்பொருள்களைக் கொண்டு செல்வது நீண்ட காலமாக பிரச்சினைக்கு உரியதாகவே தொடர்ந்தது. உணவு வாகன அணி செல்லும் பாதை மூடப்படுவது அடிக்கடிநிகழ்வ கியது. இம்முறையும் சரியாக இரண்டு வாரங்கள் அந்தப் பாதை மூடப்பட்டிருந்தது. இன்றுதான் மீண்டும் திறக்கப்பட உள்ளது.

பாதுகாப்பு நிலைமை கருதி உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்வது அடிக்கடி தடைப்பட்டதனால்வன்னிமக்கள் அவ்வப்போது பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்

பாதை மூடப்படுவதற்கும், தடை விதிக்கப்படுவதற்கும், இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் ஒரு தரப்பு மாறி அடுத்த தரப்பே பொறுப்பு என்று குற்றஞ்சாட்டி வந்தனர். இனிமேல் அத்தகையநிலை இருக்காது என நம்புகிறோம்; இருக்கக் கூடாது.

மக்களுக்கு உணவு வசதி அளித்தல் என்பது மிகவும் முக்கியமானது. அது மனித நேயத்துடனும், மனிதாபிமானத்துடனும் நோக்கப்பட வேண்டும். அதற்கேற்றாற் போலச் செயற்படவும் வேண்டும். உணவும், மருந்தும் மனிதனின் உயிர்காப்பவை அவற்றை விநியோகிப்பதில் பாதுகாப்பு, அரசியல் என்று எதுவுமே ஊடுருவக் கூடாது.

அத்தகைய நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்து மக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடையாதிருக்க வழி கோலுவது வன்முறைக்கு — படுகொலைக்கு இன ஒழிப்புக்கு —ஒப்பானதாகும். போர்க்காலத்திலுங்கூட மனிதாபிமானம் மனிதநேயம் தர்மம் என்பனவற்றைப் பேணுவதில் எல்லாத் தரப்பினருக்கும் பொறுப்பு உண்டு.

இதனை மனதில் ஏந்தி, மக்கள நலன்சம்பந்தமான — அத்தியாவசியமான — தேவைகள், சேவைகளில் தாக்குதல் தவிர்ப்பு இணக்கத்துக்கு வரவேண்டும் என்பதே மக்கள் விருப்பமாகும். உயிலங்குளம் இணக்கம் அதற்கு முன்னோடியாக விளங்குவதாக முன்னுதாரணமாக நிலைக்குக.

# வெளிநாட்டு நிதி உதவிகளை யுத்தத்தால் இழக்கும் நிலை

## மே தினக் கூட்டத்தில் உரை

வலிகாமம் தெற்கு, மே 3

" தமிழ்ப்பகுதிகளினதும், தமிழ் மக்களினதும் அபிவிருத்திப் பணிகளுக்கென வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் பல கோடிக்கணக்கான பணம் யுத்தம் காரணமாக எமக்குக் கிடைக்காமல் போகும் துர்ப்பாக்கிய நிலை இனியும் நீடிக்கக்கூடாது. யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு இருதரப்பினரும் சமாதானமாகப்பேசி நல்லதொரு தீர்வை விரைவாக அடைய வேண்டும். "

மானிப்பாய் மெமோறியல் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந திரிலோகநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ. அன்ரன் ஜோன்சன் தலைமையில் நடைபெற்ற மே தினக்கூட்டத்தில் மானிப்பாய், பண்டத்தரிப்பு கோவிற்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், வலிகாமம், மானிப்பாய், பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம், வர்த்தகர் சங்கம் ஆகியவற்றின் தொழிலாளர்களும் பொது மக்களும் பங்குபற்றினர்.

ந. திரிலோகநாதன் தமது உரையில் மேலும் கூறியதாவது;-

நீடித்து வரும் யுத்தத்தை இன்று சர்வதேச உலகமும் கண்டித்து வருகிறது. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மக்களுக்கான துரித சேவைகளையாற்றி வருகிறது. சனசமூக நிலையங்கள், கோயில்கள், வீதிகள் பலவும் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

1986 முதல் ஊழியர்கள், தொழிலாளர்கள் அடக்கி, ஒடுக்கப்படுவதைக்கண்டித்து அவர்களுக்காக குரல் எழுப்பி வருகிறோம்.

1990 ஆம் ஆண்டில் தீவுப் பகுதியில் ஏற்பட்ட அழிவுகளில் இருந்து மக்களை விடுவித்து உணவும், புனர்வாழ்வும் அளித்துள்ளோம். தீவுப் பகுதியை நவீன வசதிகள் கொண்ட பிரதேசமாக மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஜனநாயகரீதியிலான சுபீட்சமான வாழ்வை அடுத்த மேதினத்துக்கு முன்பாக தமிழ் மக்களுக்குப் பெற்றுத் தரவும், அபிவிருத்திப் பணிகளுக்காக நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் மக்களும் இணைந்து செயலாற்ற வேண்டும்— என்றார்.

மானிப்பாய் வர்த்தகர் சங்கத்தின் சார்பாக உரையாற்றிய அதன் செயலாளர் பின்வருமாறு கூறினார்—

தேசத்தின் முன்னேற்றத்துக்கான பல நல்ல சட்டதிட்டங்களையும், செயற்பாடுகளையும் முன்னெடுத்த அமரர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா இந்த நாட்டின் தேசிய சிறுபான்மை இன மக்களின் நன்மைகளைப் பற்றி கிஞ்சிற்றும் சிந்திக்கத் தவறிவிட்டார். தேசியத் தலைவர்கள் விட்ட பிழைகளால் தான் இன்று இவ்வளவு சீரழிவும் நிகழ்ந்துள்ளது.

நெற்காணிச்சட்டம் ஓய்வூதியச்சட்டம், காப்புறுதித் திட்டம், பாடசாலைகள் தேசியமயம் போன்ற பல நல்ல திட்டங்கள் கொண்டு வரப்பட்ட போதும். அரசியல் பதவி ஆசை கொண்டதால் சிறுபான்மை மக்கள் தூக்கி எறியப்பட்டனர்.

வடக்கு—கிழக்குஇணைந்த ஒரு சுயநிர்ணயத்துடன் கூடிய ஆட்சியே எமக்குத் தேவை. இதனைப் பெறுவதற்காக எந்த இயக்கமானாலும் — எந்தக் கட்சியானாலும் — இணைந்து நின்று செயற்பட வேண்டும். இன பேதமற்ற ஒரு சமுதாயத்தை ஏற்படுத்தவேண்டியது எமது தலையாய கடமை.

மானிப்பாய் ப.நோ.கூ.ச. தலைவர் மா. செல்வராசா, பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத் தலைவர் ச. செல்வரட்ணம், பண்டத்தரிப்பு ப. தெ. வ. அ. சங்கத் தலைவர் அ. பெனடிக், மானிப்பாய்கோவிற்பற்றுப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர் திருமதி லோகநாதன் உட்பட பலர் உரையாற்றினர்.

(ஐ-152)

## கடற்றொழில் உபகரணங்கள்

நயினாதீவு வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த நூறு அங்கத்தவர்களுக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி நயினாதீவில் வைத்து மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

ஊர்காவற்றுறை கடற்றொழில் திணைக்களத்தின் சிபார்சுடன் வேலணை உதவி அரசாங்க அதிபரின் அனுசரணையுடன் ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ-5)

## குருநகர் வீதிகளைத் திருத்தக் கோரிக்கை

அரியாலை, மே 3

குருநகர்ப் பகுதியில் உள்ள வீதிகளைப் புனரமைத்துத்தருமாறு இப்பகுதி மக்கள் யாழ். மாநகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். நகரப் பகுதியில் மக்கள் செறிந்து வாழும் இம் குருநகர் பிரதேசமாகும். இப்பகுதியில் உள்ள பிரதான வீதிகள், குறுக்கு வீதிகள் என்பன கடந்த பல வருடங்களாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக சீரற்றுக் காணப்படுவதோடு வீதி விபத்துக்களும் ஏற்படுகின்றன.

இது தொடர்பாக இப்பகுதி மக்கள் மாநகராட்சி மன்றத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

(ஐ-17)

## மணிக் கோபுரம்

சங்கானை மே.3

சங்கானை பிரதான வீதியில் அமைந்துள்ள அரசடி ஞானவைரவர் தேவஸ்தான முன்றலில் புதிதாக மணிக் கோபுரக் கட்டடம் அமைக்கும் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இக் கோபுரத்தை சங்கானை வர்த்தகர் ஒருவர் அமைத்துக் கொடுத்துள்ளார்

( ஐ - 29 )

## உச்சியோடை பகுதிக்கு விரைவில் மின்சாரம்

வலிகாமம் தெற்கு, மே 3

மானிப்பாய்-உச்சியோடை கிராமத்துக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம் இது தொடர்பாக வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் ஊடாக யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட முயற்சியினால் மின்சாரசபையினர் உச்சியோடைக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக தேவையான மின்கம்பங்கள் அப்பகுதியில் நடப்பட்டு வருகின்றன. (ஐ-152)

## கொக்கட்டிச்சோலையில் மேதின நிகழ்ச்சிகள்

மட்டக்களப்பு, மே 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற, கொக்கட்டிச் சோலைப் பகுதியில் நேற்று முன்தினம் மேதின நிகழ்வுகள் இடம்பெற்றன.

கொக்கட்டிச் சோலை பொது அமைப்புக்களின் ஒன்றியமும், வெள்ளா வெளி பொது அமைப்புக்களின் ஒன்றியமும் இணைந்து இந்த மேதின நிகழ்வினை நடத்தின.

அமபிலாந்துறை சந்தியிலிருந்து மாட்டுவண்டி, உழவு இயந்திரம் போன்ற வாகனங்களில் தமிழர் அவலநிலையை சித்திரிக்கும் கட்டவுட்டுக்களும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

கொக்கட்டிச்சோலை சிவன் கோயில் முன்றலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்துடன் இந்த மேதின நிகழ்ச்சி நிறைவு பெற்றன.

[ஐ-5-7-21]

# கல்வியங்காடு பகுதியில் இரவு மின் துண்டிப்பு

யாழ்ப்பாணம், மே 3

கல்வியங்காட்டில் அமைந்துள்ள மின்மாற்றி மூலம் மின்சாரம் பெறும் நல்லூர் வடக்கு. கல்வியங்காடு பிரதேசத்தில் கடந்த ஒரு வார காலமாக இரவு வேளை மின்சாரம் துண்டிக்கப்படுகிறது.

இரவு தொடர்ந்து மின்சாரம் துண்டிக்கப்பட்டிருப்பதால் இப்பகுதி மின் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதிக பளுகாரணமாகவே மின்மாற்றி ஊடான மின் விநியோகம் துண்டிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

மின்சாரம் அவசியம் தேவைப்படும் இரவு வேளையில் அது துண்டிக்கப்படுவதால் இதனைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி பொது அமைப்புக்கள் மின்சார சபையிடம் கோர உள்ளன.

இதேவேளை —

மின் பாவனையாளர்களிடமிருந்து கட்டணம் அறவிடுவதற்காக மின்சாரசபையினால் வழங்கப்படும் பணவறவுச் சீட்டில் சட்டணங்களில் வேறுபாடு காணபபடுவதாக பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

கடைசியாக அனுப்பி வைக்கப்பட்ட சிட்டைகளில் கட்டணம் வழமையை விட அதிகமாக இருப்பதாக மின் பாவனையாளர்கள் சுட்டிக் காட்டி உள்ளனர்.

வழமையாக அலகுகுறித்து ஒதுக்கப்பட்ட — மின்மானி இல்லாத — மின் பாவனையாளர்களே கட்டணம் அதிகரித்திருப்பது குறித்து அதிருப்தி அடைந்துள்ளனர்.

மின் கட்டண வேறுபாடு தொடர்பாக மின்சார சபை அதிகாரிகள் விளக்கமளிக்க வேண்டும் என பொது மக்கள் கோரி உள்ளனர்.

(ஐ-17-111)

### நாளை

சித்திரை 21

செவ்வாய்க்கிழமை

திதி: சதுர்த்தி பின்இரவு 3.58 வரை.

நட்சத்திரம்: கேட்டை- நண்பகல் 11.51வரை

சங்கட ஹர சதுர்த்தி விரதம்

சுபநேரம்: 10 26-11.56

ராகுகாலம்: 2 56-4.26

[பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி]

### உதய வாக்கு

எந்தக் காரியத்தையும் ஆற்றக் கூடியவர்கள் இல்லை... காலதேவன்.

- தார்ட் ஃபாருடே

## செஞ்சிலுவைப் பணிகள் பற்றி செய்தியாளருக்கு விளக்கம்

யாழ்ப்பாணம், மே 3

இலங்கையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் செயற்பாடுகள் குறித்து செய்தியாளர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும், பத்தி எழுத்தாளர்களுக்கும் விளக்கிக் கூறும் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். தலைமையக அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கை அலுவலக பிரச்சாரப் பணிபபாளர் ஹர்ஷா குணவர்த்தனா, யாழ். அலுவலக அதிகாரி பியர் பெர்ஹான் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு யாழ்ப்பாணத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஆற்றிவரும் பணிகள் குறித்தும், அவற்றின் நோக்கங்கள் குறித்தும் அவர்கள் கூறினர். கிழககு மாகாணத்தில குழுவின் பணிகள் குறித்த சிறிய விவரணப் படம் ஒன்றும் காண்பிக்கப்பட்டது.

பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கும் அவர்கள் பதிலளித்தனர்.

(ஐ 6-க)

## கழுத்துப்பட்டி அன்பளிப்பு

வலிகாமம். தெற்கு, மே 3

உடுவில் புது மடம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன பாடசாலை மாணவர்களின் பாவனைக்கென அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 75 கழுத்துப்பட்டிகளை அன்பளிப்பாக அதிபர் நா. சிவனேசனிடம் வழங்கி உள்ளது.

(ஐ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள, தமிழ் தொழிலாளர் இணைந்து 'போரை' நிறுத்த போராட வேண்டும்

## மேதினக் கூட்டத்தில் பேச்சு

இந்த நாட்டில் நடைபெறும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு சமாதானத் தீர்வு கிடைக்க சிங்கள, தமிழ் தொழிலாளர்கள் ஒருங்கிணைந்து போராட வேண்டும்.

இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக் கிளை (வடமாகாண ஆசிரியர் சங்கம்) ஏனைய தொழிற் சங்கங்களுடன் இணைந்து நடத்திய மேதினக் கூட்டத்தில் பேசிய அரசாங்க லிகிதர் சேவைச் சங்க உப தலைவர் இ. தவராசா இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக் கிளைத் தலைவர் மு. தியாகராசா தலைமையில் சிற்றிஹோலில் மேதினக் கூட்டம் நடைபெற்றது.

அவர் அங்கு பேசும்போது கூறியதாவது:

21 ஆம் நூற்றாண்டுக்குள் செல்லவுள்ள தொழிலாளி வர்க்கம் இன்று நிவாரணத்தில் வாழவேண்டியுள்ளது. யாழ். நகரில் இருந்த பல தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டு தொழிலாளர்களின் வாழ்க்கை சின்னாபின்னப் படுத்தப்பட்டுள்ளது. மீன்பிடிக்குப் பெயர்பெற்ற எமது பகுதியில் மீன் டின்களை இறக்குமதி செய்து விற்கும் நிலை உள்ளது. அரசும் முதலாளித்துவமும் திட்டமிட்டு எமது பொருளாதார வளங்களை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலனுக்காக வறுமை நிலைக்குத் தள்ளுகிறது.

உலகின் பல்வேறு பகுதிகளில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உதவுவதாகக் கூறிக்கொண்டு அமெரிக்கா இன அழிப்புக்களில் ஈடுபடுகிறது. உலக நாடுகளில் தொழிலாளர்களின் அரசு ஏற்படாதவரை அமெரிக்க ஏகாதிபத்தியம் இன அழிப்புக்களிலும் தொழிலாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் தொடர்ந்தும் ஈடுபடும். இதனை மாற்ற தொழிலாளி வர்க்கம் ஒருங்கிணைந்து உலக நலனுக்காகப் போராட வேண்டும் என்றார்.

மு. தியாகராசா தமது தலைமையுரையில் கூறியதாவது:

தற்போதைய சூழ்நிலையில் வடபகுதியில் உள்ள தொழிற்சங்கங்கள் வலுவான போராட்டங்களில் ஈடுபடாதிருக்கின்றன. அரசாங்கம் இன்று பல்வேறு துறைகளையும் தனியார் மயப்படுத்தும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றது. இதனை அனுமதித்தால் பாதுகாப்புத் துறை தவிர ஏனைய அனைத்துமே தனியார் மயப்படுத்தப்பட்டு விடும். அரசின் தனியார்மயக் கொள்கையை அனைத்துத் தொழிலாளர்களும் தீவிரமாக எதிர்க்க வேண்டும்.

இன்று கொழும்பில்இருந்து கொண்டு முதலாளி வர்க்கம், மதகுருமார் தம்மைப் பாதுகாக்க இனப்பிரச்சினை பற்றிப் பேசுகிறார்கள். தொழிலாளர்கள் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேசாதது வருத்தத்திற்குரியது. கொழும்பில் தொழிலாளர்கள் ஒன்று திரண்டு இனப்பிரச்சினைத் தீர்வுக்குக் குரல் கொடுத்தால் அதற்குப் பெறுமதியுண்டு. நாடு நல்ல எதிர்காலத்தை நோக்கிச் செல்ல தொழிலாளர்கள் இனப்பிரசினைக்குத் தீர்வு காண்பதில் அக்கறை செலுத்த வேண்டும்—என்றார்.

இலங்கை ஆசிரியர் சங்க மத்திய குழு உறுப்பினர் சா. தியாகலிங்கம் பேசும்போது கூறியதாவது:

இன்று தொழிலாளர்கள் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. கடமைகளில் விசுவாசமாகச் செயற்படும் அவர்கள் தமது உரிமைகளைக் கேட்கும்போது ஏளனப்படுத்தப்படுகின்றனர். தீவக வலயத்தில் நீண்டகாலம் கடமை புரியும் ஆசிரியர்கள் இடமாற்றம் கோரும்போது மாகாணசபை அதிகாரிகள் அவர்கள் பாவம் என யேசு பாணியில் பேசுகிறார்கள். தொழிலாளர்களின் கஷ்டங்கள் பிரச்சினைகளை உணராது தமது கதிரையைக் காப்பாற்றுவதிலேயே பெரும்பாலான அரச அதிகாரிகள் கவனமாக உள்ளனர் — என்றார்.

வடக்கு—கிழக்கு மாகாண அரசாங்க பொதுச் (சிற்றூழியர்) சங்க யாழ். மாவட்டக் கிளைத் தலைவர் இ. பஞ்சாட்சரம் பேசும்போது கூறியதாவது:

தொழிலாளர்களின் உரிமைகளும் சுதந்திரமும் எமது இனத்தைப் பொறுத்தவரை இதுவரை கிடைக்கவில்லை. எமது ஊதியம் சரிவர வரையறுக்கப்படவில்லை. நாம் எமது பணியைப் பொறுத்தவரை நேர்மையுடன் செயற்படும் வேளையில் உரிமைக்காகவும் தொடர்ந்து போராடுவோம்—என்றார்.

இலங்கை வங்கி ஊழியர் சங்க யாழ். கிளை உப தலைவர் சொ. சிவபாலன், பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி. நடராஜ் வங்கி ஊழியர் சங்க யாழ். மாவட்டக் கிளைச் செயலாளர் கெ. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரும் உரையாற்றினர்.

(ஐ-103)

# ஆயிரத்து 200 பேருக்கு போஷாக்கு பற்றிய பயிற்சி

போஷாக்கு நிலையை நீண்டகாலத்திற்கு மேம்படுத்தும் நோக்கத்துடன்யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் ஆயிரத்து 200 பேருக்கு போஷாக்கு சம்பந்தமான பயிற்சி வகுப்புகள் நடத்தப் படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் முதலாவதுபயிற்சிநெறிஇன்றுதிங்கட்கிழமை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சியில் பங்கு பற்ற விரும்பும் சுகாதார தொண்டர்கள் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் உள்ள நகரப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டப்பகுதியில் பதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-5-17)

# வலி. வடக்குப் பகுதியில் நிலக்கடலைச் செய்கை

## பரீட்சார்த்த முயற்சி

சுன்னாகம், மே 3

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பரீட்சார்த்தமாக நிலக்கடலை பயிரிடப் படவுள்ளது.

இங்குள்ள மண்ணில் நிலக்கடலை சிறப்பான விளைச்சலைத் தரமுடியும் என நம்பப்படுவதால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பரீட்சார்த்தமாக முதலில் கால் ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலையைப் பயிரிடுவது என்றும்—

இதன் பெறுபேற்று அடிப்படையில் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படுமெனவும்—

மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-27)

# கல்விப்பணிமனை திறப்பு

யாழ். கல்வி வலயத்துக்குள் அடங்கும் யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிமனை வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நடராசலிங்கம் பிள்ளையினால் கடந்த வெள்ளிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். கல்விக் கோட்டத்தின் கீழ் உள்ள அனைத்துப் பாடசாலைகளினது செயற்பாடுகள் அனைத்துக்கும் மேற்படி பணிமனையே பொறுப்பாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# தட்டுப்பாடு

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் கிளினிக்குகளுக்குரிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கிளினிக்குக்கு வரும் நோயாளர்களிடம் மருந்து வகைகளை வெளிக்கடைகளில் வாங்குமாறு கூறப்படுகிறது.

குறிப்பாக நீரிழிவு நோய்களுக்கான மருந்து வகைகள் கையிருப்பில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-112)

# வளைவு அமைப்பு

கோப்பாய் கிறிஸ்தவகல்லூரியில் தமிழ்ச்சங்கத்தின் முயற்சியால் பாடசாலை முகப்புப் பெயர் வளைவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்ச் சங்கத்தினரால் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா நிதியிலிருந்தே இந்தப் பெயர் வளைவு அமைக்கப்பட்டுள்ளது.


# வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்

VADAMARADCHY STENO CLUB

# வாழ்த்துகின்றோம்

போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இன்று [ 03—05—99 ] முதல் வடக்கு கிழக்கு மாகாண அரச சேவையில் தமிழ் சுருக்கெழுத்தாளர்களாக நியமனம் பெறும் கீழ்க் குறிப்பிட்ட எமது கழக உறுப்பினர்களை / பழைய மாணவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

| பெயர் | | வதிவிடம் | சேவைமுறைப் பயிற்சி பெற்ற நிறுவனம் | நியமனம் பெறும் நிறுவனம் |
|---|---|---|---|---|
| 01. க. ஜெயரூபன் | ● | நாவலடி, பருத்தித்துறை. | ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை. | உள்துறை அமைச்சு, வடக்குக் கிழக்கு மாகாணசபை திருகோணமலை. |
| 02. மோ. தர்சினி | □ | ஊறணி, வல்வெட்டித்துறை. | உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. | பிரதேச செயலகம், சங்கானை. |
| 03. த. சசிகலா | | வல்வெட்டி. | சிவகுரு வித்தியாசாலை, வல்வெட்டித்துறை. | பிரதேச செயலகம், தெல்லிப்பழை. |
| 04. பூ. சுஜாதா | | வல்வெட்டித்துறை. | மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை | பிரதேச செயலகம், உடுவில். |
| 05. வ. வெண்நிலா | | உடுப்பிட்டி. | நெல்லியடி ம. ம. வித்தியாலயம். | பிரதேச செயலகம், கோப்பாய். |
| 06. க. யோகராணி | | பொலிகண்டி. | பொலிகண்டி அ. த. க. பாடசாலை. | பிரதேச செயலகம், பருத்தித்துறை. |
| 07. செ. செல்வரஞ்சினி | | உடுப்பிட்டி. | வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி. | பிரதேச செயலகம், கரவெட்டி. |
| 08. செ. சொர்ணமலர் | * | பருத்தித்துறை | பிரதேச செயலகம், பருத்தித்துறை. | பிரதேச செயலகம், மருதங்கேணி. |
| 09. ஜெ. வாசுகி | *□ | கெருடாவில். | பிரதேச செயலகம், பருத்தித்துறை. | வலயக் கல்வித் திணைக்களம், வலிகாமம். |
| 10. த. முருகாம்பிகை | * | மாலுசந்தி. | பிரதேச செயலகம், பருத்தித்துறை. | வலயக் கல்வித் திணைக்களம், வலிகாமம். |
| 11. அ. உதயபவானி | □ | கரணவாய். | கோட்டக்கல்வி அலுவலகம், கரவெட்டி. | வலயக் கல்வித் திணைக்களம், வடமராட்சி. |
| 12. இ. ஜீவா | *□ | உடுப்பிட்டி. | வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி. | வலயக் கல்வித் திணைக்களம், வடமராட்சி. |
| 13. ந. பிருந்தா | ● | பொலிகண்டி. | மெதடிஸ் பெண்கள் உயர்தரப்பாடசாலை. | நகரசபை, வல்வெட்டித்துறை. |
| 14. இ. மதிரசனி | * | கரணவாய் வடக்கு. | கோட்டக் கல்வி அலுவலகம், பருத்தித்துறை. | மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| 15. ச. குபீந்தினி | * | கல்லுவம். | கரணவாய் மகா வித்தியாலயம். | மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| 16. ந. நஜிதா | *□ | கொம்மந்தறை. | நெல்லியடி ம. ம. வித்தியாலயம். | பிரதேசசபை, நல்லூர். |
| 17. க. நிர்மலா | | திக்கம். | | பிரதேசசபை, வலி வடக்கு. |

● பருத்தித்துறை பிரதேச செயலகம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியவற்றின் அனுசரணையுடன் பயின்றவர்கள்.

* தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் அனுசரணையுடன் பயின்றவர்கள்.

□ கழகத்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமை புரிந்தவர்கள்.

மேற்குறிப்பிட்டவர்களுக்கு விசேட சுருக்கெழுத்து வேகப் பயிற்சி வகுப்புகளைத் தொண்டர் சேவை அடிப்படையில் நடத்திய செல்வி சி. மீரா [தட்டெழுத்தாளர், புலோலி ப. நோ. கூ. சங்கம்] அவர்களுக்கும், சிறப்பாகச் செயன்முறைப் பயிற்சியை வழங்கிய நிறுவனங்களுக்கும் மற்றும் கழக வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கிவரும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

குறிப்பு:— 05—05—99 இல் ஆரம்பமாகும் தமிழ் சுருக்கெழுத்தாளர் பயிற்சி வகுப்பில் பயில விரும்புபவர்கள் இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை நேரில் தொடர்பு கொள்ளலாம்.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
வதிரி — கரவெட்டி.

[C/7357]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### வலிகாமம் வடக்கில்

# காணி சுவீகரிப்புக்கு எதிராக மக்களின்சாத்வீகபோராட்டம்

## முதற்கட்டமாகக் கூட்டுப் பிரார்த்தனை

வலி. வடக்கில் காணிகளை சுவீகரிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்— என்று கோரி கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபடுவதற்கு வலி. வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்கள் தீர்மானித்துள்ளனர்;

வலி. வடக்கு புனர்வாழ்வுக் கழகத்தின் வருடாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை தெல்லிப்பழையில் நடைபெற்றபோது அதில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

காணிகள் சுவீகரிப்பை எதிர்த்து தொடர்ந்து சாத்வீக வழியில் போராடுவது என்றும் —

அதன் முதற்கட்டமாக விரைவில் கூட்டுப் பிரார்த்தனை ஒன்றை நடத்துவது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ வலி; வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதி மக்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

★ நிவாரணம் வழங்க முடியாத சந்தர்ப்பத்தில் அவர்களின் வீடுகளுக்கு வாடகை மற்றும் வருமானங்களுக்கான இழப்பீட்டையாவது கொடுக்கவேண்டும்.

★ வலி. வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசிக்கும் மக்கள் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடுகளுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்க முடியாதுள்ளது. இந்த நிலையை நீக்கவேண்டும்.

★ இடம்பெயர்ந்து வாழும் வலி. வடக்குப் பகுதி மக்களின் மீள்குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபாவை வலி வடக்கு பிரதேச செயலகமே வழங்க வேண்டும்.

★ மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளில் உள்ள கிறிஸ்தவ, இந்து ஆலயங்களில் நாளாந்தப் பூசைகள் நடைபெறுவதற்கு வசதியாக மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

★ தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்தை மீண்டும்பழைய இடத்தில் இயங்க அனுமதிக்க வேண்டும்;

★ தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை மீண்டும் சொந்த இடத்தில்இயங்க அனுமதிக்கவேண்டும்.

★ காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை மீண்டும் சொந்த இடத்திலேயே இயங்க அனுமதிக்கவேண்டும்.

பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அடிப்படையில் ஓர் உள்ளூராட்சி மன்றத்துக்கு மூவர் என்ற வகையில் 15 பேர் கொண்ட நிர்வாகக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது;

இந்தக் குழுவின் தலைவராக சு. பரமநாதனும் செயலாளராக சி; சிவமகாராசாவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

விரைவில் இந்தக் குழுவை உள்ளடக்கிய தூதுக்குழு ஒன்று அரசாங்க அதிபரைச் சந்தித்து வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக பேச்சு நடத்துவது என்றும் மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(ஐ–6·86)

# தென்மராட்சியில் இன்றும் நாளையும் போலியோ தடுப்புமருந்து விநியோகம்

தென்மராட்சி, மே 3

யுனிசெப நிறுவனமும் சுகாதாரத் திணைக்களமும் இணைந்து கடந்த மூன்று வருடங்களில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கிய போலியோ தடுப்பு மருந்தினை இதுவரை பெற்றுக் கொள்ளாத குழந்தைகளுக்கு இன்றும் நாளையும் விசேட நிலையங்களிலும் சில குடும்ப நல சேவையாளர் பிரிவுகளில் வீடு வீடாகச் சென்றும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே சொட்டுமருந்து கொடுக்கத் தவறியவர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தமது குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்க ஒத்துழைக்குமாறு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்று காலை 7மணி முதல் மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையம், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, இடைதாவில் கிராம சபைக் கட்டடம், மறவன்புலோ ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய நிலையங்களிலும் கச்சாய், அல்லாரை, மீசாலை வடக்கு, எழுதுமட்டுவாழ், கொடிகாமம், உசன், பளை, இயக்கச்சி ஆகிய குடும்ப நல சேவையாளர் பிரிவுகளிலும் —

நாளை கைதடி மத்திய மருந்தகம், மட்டுவில் வடக்கு வேற்பிள்ளை சனசமூக நிலையம், வரணி மத்திய மருந்தகம் ஆகிய நிலையங்களிலும்—

மிருசுவில், மந்துவில் ஆகிய குடும்ப நல சேவையாளர் பிரிவுகளிலும் —

போலியோ சொட்டுமருந்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ–117)

## பரிசளிப்பு

கல்வியங்காடு வீரபத்திரர் கோயில் வருடாந்த உற்சவ காலத்தையொட்டி நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் பங்குபற்றிச் சித்தியடைந்த நூறு மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கும்வைபவம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3. 00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

(இ–ரி)

## இளைஞன் கைது

யாழ்ப்பாணம், மே 3

யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் உள்ள சண்முகம் யோகராஜா (வயது 24) என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9. 30 மணியளவில் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அவரது உறவினர்களால் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(இ–6)

## குளம் ஆழமாக்கல்

சுன்னாகம், மே 3

உலக உணவுத் திட்டத்தின் உதவியின் கீழ் மல்லாகம் அச்சலைக் குளத்தை ஆழப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(க–27)

## சமய [illegible]

கோப்பாய் அருள்மிகு வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய ஜீர்ணோத்தாரண — அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்றுவந்தன;

[க–ரி]

★ ★ ★

கொழும்புத்துறை, மே 2

புங்குடுதீவு பாணாவிடை அருள்மிகு ஸ்ரீ சிவன் கோயிலின் வருடாந்த உற்சவம் சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்து நாள்கள் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனைகளுடன் உற்சவம் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 9 ஆம் திகதியும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(க–30)

## கட்டட வேலைகள் விரைவில் பூர்த்தி

சங்கானை, மே 3

சங்கானை பொதுச் சந்தைக்கு அண்மையில் நிர்மாணிக்கப்பட்டு வரும்வலி. மேற்குபிரதேசசபைகட்டடத்தின் முதலாம்கட்ட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

தற்போது 2 ஆம் கட்டமாக மாடிக்கட்டடம் அமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருவதாக வலிமேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா தெரிவித்தார். மிக விரைவில் இக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துவிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

[ஐ·29]

## நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், மே 3

யாழ். கல்வி வலயப் பகுதிகளில் அதிபர் வெற்றிடமாகவுள்ள பாடசாலைகளுக்கு புதியவர்களை நியமிப்பதற்கான நேர்முகத்தேர்வு இன்று காலை 10 மணிக்கு வலயப் பணிமனையில் நடைபெறவிருக்கின்றது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களை உரிய ஆவணங்களுடன் வருமாறு யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் என். தணிகாசலம்பிள்ளை கேட்டுள்ளார்.

(இ–3)

## கணனிப்பயிற்சி இறுதித் தேர்வு

யாழ்ப்பாணம். மே 3

யாழ். மத்திய கல்லூரி முறைசாராக் கல்விப்பிரிவின் கணனிப்பயிற்சி இறுதித் தேர்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியில் நடைபெறவிருப்பதாகக் கல்லூரி அதிபர். க. இராஜதுரை தெரிவித்தார்.

இந்தத் தேர்வுக்கு சமுகமளிக்காதவர்களுக்கு பின்னர் தேர்வு நடத்தப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

(இ–3)

### துப்பாக்கி...

[முதலாம் பக்கத் தொடர்]

துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகிக் காயமடைந்த நடுத்தர வயது மதிக்கத்தக்க அந்த நபர் படையினரால் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் உடன் சேர்க்கப்பட்டார்.

யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட சமயம் அவர் மரணமானார்.

சடலம் அடையாளம் காண்பதற்காக ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது!

உயிரிழந்தவர் சித்த சுவாதீனமற்றவர் எனக் கூறப்படுகின்றது,

(இ–3-6- 15–117)


JAFFNA COLLEGE, VADDUKODDAI.

Computer Training Programme for Teachers, Government Officers, & G. C. E. A/L Students

**Programme:**

1. Computer awareness programme
2. Teacher Training Programme in Computer Education
3. Latest Packages in Pentium II machines
   Practicals in Pentium II Computers

**Duration: 3 Months**

Classes commences on May 17th at Air-conditioned computer lab at Vaddukoddai.

Applications close on May 10th.

Application Forms can be obtained from the office on payment Rs. 10/-

Classes from 3-00 p.m. to 6-00 p.m. on week days and full day on Saturdays.

Classes will be conducted by Highly Qualified persons.

G. Rajanayaham
Principal

(C/7356)



நடராஜா ஆங்கிலக் கல்வி நிலையம்
882, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

க. பொ. த உயர்தரம் 2001
வகுப்புக்கள் ஆரம்பம் 05 - 05 - 1999

★ தமிழ். திரு. அருந்தாகரன். B. A. (Hons)
★ அளவையியலும் விஞ்ஞான முறையும்
திரு. கருணாகரன் B. A
★ புவியியல்—திரு இராஜமனோகரன் B A,
★ பொருளியல்—திரு. விஜயநாதன் B. A. (Hons)
★ இந்து நாகரிகம்—திரு. M. R. (B A)
★ Common General Paper
திரு. இராஜமனோகரன் B. A,
திரு. கருணாகரன் B. A.

5 ஆம் தரம் முதல் 11 ஆம் தரம் வரை
அனைத்துப் பாடங்களும்
G. A. Q, B. A. Part I, II
ஆகியவற்றுக்கான வகுப்புகளும்
தனித்துவம் மிக்க ஆசிரியர்களினால் நடத்தப்படுகின்றன.

(சி/7404)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

இன்று ஆசார்யாபிஷேகம் பெறும்
எமது ஆலய சிவாச்சாரியர்

பிரம்மஸ்ரீ
**சிதம்பரநாதக் குருக்கள் கிருபாகரசர்மா**

அவர்களை சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு எய்த வேண்டுமென சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீவீரமாகாளி அம்பாள் பாதங்களை பணிந்து வணங்கி வாழ்த்துகின்றோம்.

— ஸ்ரீ வீரமாகாளி அம்பாள்
தொண்டர் சபையும்,
சரசாலை வாழ் மக்களும்.

(சி/7394)



## BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

புதிய பிரிவு
**A/L 2001**

**கணிதம் உயிரியல்**

| | | |
|---|---|---|
| பௌதிகவியல்: | — | திரு. ஜெயசீலன் |
| இரசாயனம்: | — | திரு. எட்வேட். சிவத்திரன் |
| இணைந்த கணிதம்: | — | திரு. ஐங்கரன் |
| உயிரியல்: | — | திரு. பாலா, ஞானேந்திரன் |

ஆரம்பம்: 05-05-1999
புதன் மாலை 4 30 மணி

(சி/7405)



## நிரு ரியூசன் சென்ரர்

கோண்டாவில்.

**O/L DAY CLASS**

ஆரம்பம்: 05 — 05 --- 99
(புதன் காலை 7. 00 மணி)

(சி/7387)



## நாதன் மற்ஸ் அக்கடமி

சண்டிலிப்பாய்.

**O/L DAY CLASS 1999**

பிரிவு I

ஆரம்பம்: 1999 - 05 - 05 புதன் காலை 8.30 மணி

எமது வழமையான ஆசிரியர் குழு

குறிப்பு:
1. கணித பாடம் சித்தியடையாத O/L மாணவர்களுக்கு விசேட கணித வகுப்பும் நடைபெறும்.
2. வாராந்தம் கணித பாடம் 14 மணி நேரம் நடைபெறும்.
3. வகுப்புக்கள் காலை 8 30 முதல் 2.00 மணி வரை

கணிதம்: திரு. V. N. பத்மநாதன்

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(65369)



## குமார் ஏஜென்ட் அன் கொமினிக்கேசன்

342, K K.S. ROAD,
JAFFNA.

021–2999
021–2050

3 ஆம் கட்டை,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

021–3051
021–3052
021–2080

பக்ஸ் வசதியும் உண்டு

**இரவு பகல் சேவை. தங்குமிட வசதிகள் இலவசம்.**

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசிச் சேவையைக் குறைந்த கட்டணத்தில் நொடிப் பொழுதில் பெற்றுக் கொள்ளலாம்.

[சி/7396]


# கடற்படை அதிகாரிகள் இந்தியாவுக்கு!

கொழும்பு, மே 3

இலங்கைக் கடற்பகுதியில் எதிர் நோக்கியுள்ள அச்சுறுத்தல்கள் குறித்துப் பேச்சுக்கள் நடத்த கடற்படையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் இருவர் இந்தியாவுக்கு நாளை மறுதினம் செல்கிறார்கள்.

கொமடோர், சி. என், டுடுலேவத்த கப்டன் எஸ். டி. சமரசிங்க ஆகியோரே இந்தியா செல்லும் அதிகாரிகளாவர்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கடத்துவது, மீனவர்கள் மீது நடக்கும் தாக்குதல்கள் தொடர்பாக இவர்கள் இந்திய கடற்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவர்.

(இ-3)

## போக்குவரத்து...

(முதலாம் பக்கத் தொடர்)

யையும் இணைக்கும் பாதை ஆகியவற்றைப் பொது மக்கள் பாவனைக்குத் திறந்து விடல்.

★ நகருக்கு வரும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவை பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட இடங்களில் நிறுத்தப்பட வேண்டும்.

★ கஸ்தூரியார் வீதி, காங்கேசன்துறை வீதி, ஆஸ்பத்திரியில் இருந்து சத்திரச் சந்திவரை உள்ள வீதி ஆகியவற்றில் சைக்கிள்களோ, மோட்டார் சைக்கிள்களோ நிறுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

★ இந்த விடயத்தைமேற்பார்வை செய்ய போக்குவரத்து வார்டன்கள் நியமிக்கப்படுவர்.

★ நகரத்துக்கு பஸ்கள் வரும் பாதைகளில் பொருள்களை இறக்க லொறிகள் வீதிக்கு குறுக்கே நிறுத்தக் கூடாது. போக்குவரத்துக்கு இடைஞ்சலில்லாமல் லொறிகள் நிறுத்தப்பட வேண்டும். பொருள்களை இறக்கிய பின்னர் அந்தலொறிகள் நகருக்கு வெளியே சென்று தரித்து நிற்க வேண்டும்.

★ யாழ். பஸ் நிலையத்தோடு சேர்ந்த கடைகளில் எரிபொருள் விற்கத் தடை செய்வது.

★ பஸ் நிலையக் கட்டடத்துடன் இணைந்து உள்ள கடைகள் அகற்றப்படும்.

★ தனியார் பஸ்களும், வடபிராந்திய போக்கு வரத்துச்சபை பஸ்களும் இணைந்த நேர அட்டவணையுடன் சேவை நடத்துதல்.

★ நகரில் சுகாதாரத்தைப் பேண விசேட மலசல கூடங்களை அமைத்தல். (இ-3)

## மாணவன்...

(முதலாம் பக்கத் தொடர்)

றும்— தெரிவிக்கப்பட்டது.

இந்த மாணவரை விசாரணைக்கு சமுகமளிக்குமாறு படையினர்கோரியதையடுத்து அவரது தந்தையார் தட்பரானந்தன் அவரை படையினரிடம் ஒப்படைத்தார்.

இவரைக் கைது செய்ததுக்கான ரசீதைப்பின்னர்படையினர் தந்தையிடம் வழங்கினர்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவிடமும் இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-3-6)


விஷ்ணுவின்
பிரமிட் வீடியோ CD
வெளியீடு!

T. ராஜேந்தரின்
மோனிஷா
என் மோனலிஷா

பிரதிகள் உடன் பெறலாம்

**விஷ்ணு வீடியோ**

K.K.S. வீதி,
கோண்டாவில்.

(65390)


# கசிப்பு வேட்டைக்கு சென்ற பொலீஸார் மீது சூடு!

## திருமலையில் சம்பவம்

திருகோணமலை, மே 3

திருகோணமலை மாவட்டத்தில் துவரங்காட்டுப் பகுதியில் நேற்றுக் காலை கசிப்பு வேட்டைக்குச் சென்ற பொலீஸ் கோஷ்டி மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பிரதிப் பொலீஸ் அதிபர் காயமடைந்தார்.

திருகோணமலை மாவட்ட பிரதிப் பொலீஸ் அதிபரான எஸ். ஏ. ராஜபக்ஷ என்பவரே காயமடைந்து திருமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கசிப்பு வேட்டைக்கு சென்ற பொலிஸார் மீது கசிப்புக் காய்ச்சுவதில் ஈடுபட்டு இருந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் —

பொலீஸார் திருப்பித் தாக்கியதில் அவர்கள் தப்பி ஓடி விட்டனர் என்றும் — கூறப்பட்டது. (இ-3)

# பெர்னாண்டஸ் மீது பகவத் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 3

வங்காளவிரிகுடாவில் ஆயுதங்களுடன் திரியும் கப்பல்களைத் தடுக்கவோ அல்லது துரத்தவோ வேண்டாம் என்று பாதுகாப்பு அமைச்சர் உத்தரவு பிறப்பித்திருந்தார். இந்த உத்தரவு இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தது.

பதவி விலக்கப்பட்ட இந்திய கடற்படைத் தளபதி விஷ்ணு பகவத் மேற்கண்டவாறு கொழும்பில் இருந்து வெளிவரும் 'சண்டேரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸை இந்தப் பேட்டியில் அவர் கடுமையாகச் சாடியுள்ளார்.

''வங்காள விரிகுடாவில் செல்லும் எந்த ஓர் ஆயுதக் கப்பலையும் தாக்க வேண்டாம் என விடுத்த உத்தரவால் நாம் அதிர்ச்சியடைந்திருந்தோம்'' என்றும் அவர் கூறியுள்ளார். (இ-3)

# இலங்கையர் தலைமையில் றுவாண்டாவுக்குக் குழு

கொழும்பு, மே 3

றுவாண்டாவில் நடக்கும் படுகொலை மற்றும் யுத்த நிலை தொடர்பாக ஆராய அங்கு செல்லும் ஐ. நா. குழுவுக்கு இலங்கையர் ஒருவர் தலைமை வகிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

றுவாண்டாவில் நடக்கும் படுகொலைகள், யுத்த நிலை குறித்து ஆராய ஐ. நாவின் சர்வதேசப்போர்க்குற்றங்கள் தொடர்பான ஆணைக்குழு ஒரு தூதுக்குழுவை அனுப்பவிருக்கின்றது.

இந்தக் குழுவுக்கு தலைமை வகித்துச் செல்ல இலங்கையரான ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் டாக்டர் அசோக டி. இஸட் குணவர்த்தனாவை ஐ. நா. நியமித்துள்ளது.

இந்தக் குழுவில் பலநாட்டுப் பிரதிநிதிகள் அங்கம் பெறுகின்றனர். (இ-3)

## வீதி சேதம்

வடமராட்சி கிழக்கு பருத்தித்துறை மருதங்கேணி வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் உள்ளது.

வல்லிபுரக்கோயிலிலிருந்து குடத்தனை வரையுள்ள வீதியை மண் அள்ளும் உழவு இயந்திரங்கள் அதிகம் பயன்படுத்துவதால் அவ்வீதி பெரிதும் பழுதடைந்து வருகின்றது.

இதனால் அப் பிரதேசம் மணலும், குண்டும், குழியுமாகக் காணப்படுகின்றது.

## செஞ்சிலுவை...

(முதலாம் பக்கத் தொடர்)

காப்பு அமைச்சு தனது சிபார்சில் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கப்பல் வந்ததும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் வழித்துணையுடன் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3-164]


## U.E.C. (ராகவன்) கல்விநிலையம்

பலாலி வீதி, உரும்பிராய்.

**O/L DAY CLASS**

புதிய பிரிவு ஆரம்பம்: 05-05-99 8 — 2 மணி வரை.

உயிரியல் - திரு. பாலா

புதிய பிரிவு ஆரம்பம்: 05 - 05 - 99

(65385)



## BARATHY

சித்தன்கேணி

(A/L 2001)

புதிய பிரிவு

ஆரம்பம் 05—05 - 99 புதன் 3. 00 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. சண் |
| வணிகக் கல்வி | — | திரு. பசில் |
| கணக்கீடு | — | திரு. B. முகுந்தன் |
| CGP | — | திரு. குமாரவேல் |
| அளவையியல் | — | திரு. R. P. சர்மா |
| தமிழ் / இந்து நாகரிகம் | — | திரு. பாலா |
| புவியியல் | — | திரு. குமரன் |
| நாடக - அரங்கியல் | — | திரு. நிஷாந்தன் |
| கிறிஸ்தவம் | — | திரு. வசந்தன் |

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்

(65393)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03. 05-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org